# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# அரசியலமைப்புக்கான எட்டாவது திருத்தம்

---

*[1984, மார்ச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, மார்ச்சு மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 35* *தபாற் செலவு : சதம் 60*

## அரசியலமைப்புக்கான எட்டாவது திருத்தம்

[1984, மார்ச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 55/83
1594

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துதற்கான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, அரசியலமைப்புக்கான எட்டாவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம். — *சுருக்கப் பெயர்.*

2. இதனகத்துப்பின்னர் "அரசியலமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையானது, அவ் உறுப்புரையின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— — *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

"(இஇ) உயர்தொழிலில் பிரபலம் அடைந்துள்ளவர்களாகவும் உயர்ந்த நடத்தையையும் உயர்தொழில் நிதார்த்தத்தையும் பேணிவந்துள்ளவர்களாகவும் இருக்கின்ற சட்டத்தரணிகளை சனாதிபதி வழக்குரைஞர்களாக நியமிப்பதற்கும், இப்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் சனாதிபதி வழக்குரைஞர் ஒவ்வொருவரும், இராணி வழக்குரைஞர் ஒருவரால் இதுவரை அனுபவிக்கப்பட்டுவந்துள்ளவையான அத்தகைய எல்லா சிறப்பு உரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்;".

3. அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (எ) என்னும் உட்பந்தியானது, "பற்றியவையும் சிரேட்ட சட்டத்தரணிமாரை நியமித்தல்" என்ற சொற்களை அதிலிருந்து விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — *அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

4. நூற்றி அறுபத்தொன்பதாம் உறுப்புரையை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உறுப்புரை உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அரசியலமைப்பின் 169அ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும் :— — *அரசியலமைப்பில் 169 அ என்னும் உறுப்புரையை உட்புகுத்துதல்.*

*'இராணி வழக்குரைஞர்கள், சிரேட்ட சட்டத்தரணிகள் ஆகியோர் தொடர்பான ஏற்பாடு.*

169அ. (1) (அ) அரசியலமைப்பு வலுவுக்கு வருவதற்குமுன்னர் நியமிக்கப்பட்ட இராணி வழக்குரைஞர் ஒவ்வொருவரும் ; அத்துடன்

(ஆ) அரசியலமைப்பு வலுவுக்கு வந்ததன் பின்னர் நியமிக்கப்பட்ட

சிரேட்ட சட்டத்தரணி ஒவ்வொருவரும்,

இவ்வுறுப்புரை வலுவுக்கு வரும் தேதியிலிருந்து சனாதிபதி வழக்குரைஞர் என அழைக்கப்படுதலும் அறியப்படுதலும் வேண்டும் என்பதுடன், இராணி வழக்குரைஞர் ஒருவரால் இதுவரை அனுபவிக்கப் பட்டு வந்துள்ளவையான அத்தகைய எல்லா சிறப் புரிமைகளையும் தொடர்ந்தும் அனுபவித்தலும் வேண் டும்.

(2) சிரேட்ட சட்டத்தரணிகளின் நியமனம் தொடர்பாக 136 ஆம் உறுப்புரையின்கீழ் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும், இவ்வுறுப்புரை வலுவுக்கு வரும் தேதியிலிருந்து பயனுறும் வகையில் ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் "சிரேட்ட சட்டத்தரணி" பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும் இவ் வுறுப்புரை வலுவுக்குவரும் தேதியிலிருந்து "சனாதி பதி வழக்குரைஞர்" பற்றிய குறிப்பீடொன்றை உள் ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.'.